# மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.




தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (18.07.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இம்மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்கள் கோரிக்கை மனுக்களாக மேல்நிலைத் தொட்டி அமைத்தல், புதிய ஆழ்துளை கிணறு, தகனமேடை, குடிநீர் வசதி, மின் வசதி, பட்டா வேண்டி விண்ணப்பித்தல், கல்வி உதவி தொகை, தரைமட்ட பாலம், மூன்று சக்கர வண்டி, ஓய்வூதிய தொகை, பசுமை வீடு, பட்டா மற்றும் சிட்டா பெயர் மாற்றம், வாரிசு சான்றிதழ், ஜாதி சான்றிதழ், பேருந்து வசதி, குழந்தைகள் நல மையம், வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, இலவச தையல் இயந்திரம், சலவைப்பெட்டி மற்றும் வீட்டுமனை பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் மனுக்கள் என மொத்தம் 409 மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலரிடம் வழங்கி உடனடி தீர்வு காண வேண்டுமென அறிவுறுத்தினார்.

முன்னதாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் காதொலிக்கருவி 3 நபருக்கும், சக்கர நாற்காலி (வீல்சேர்) 1 நபருக்கும், மூன்று சக்கர சைக்கிள் 2 நபர்களுக்கும், ஊன்று கோல் 24 நபர்களுக்கும், மடக்கும் குச்சி மற்றும் கறுப்பு கண்ணாடி 2 நபர்களுக்கும், என ஆக மொத்தம் 32 பயனாளிகளுக்கு ரூ. 39 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளையும் மற்றும் 2014 - 15 ஆம் ஆண்டில் சிறுசேமிப்பு வசூலில் சிறந்து விளங்கிய மகளிர் முகவர்கள், நிலை முகவர்கள் மற்றும் சம்பளப்பட்டியல் சேமிப்புக்குழு தலைவர்கள் 18 நபர்களுக்கு பரிசுத் தொகை, நினைவு பரிசுகளையும் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ. சங்கர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொ) திரு. குப்புசாமி, நில அளவை உதவி இயக்குநர் திரு. மனோகரன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி. ஆர்த்தி, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) திருமதி. பாப்பாத்தி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.மு. பிச்சைராமன், சமூக பாதுகாப்பு திட்டம் தனி துணையாட்சியர் (பொ) திருமதி. மல்லிகா, ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் திருமதி. இலாஹிஜான், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு. அமீர்பாஷா, முன்னோடி வங்கி மேலாளர் திரு. முத்தரசு, மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. மகிழ்நன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி.